
# திராவிடத்தால் வாழ்கிறோம்

1108

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

## இது பெரியார் மண்

ர.பிரகாசு

47

பகுத்தறிவுக் கொள்கைகளை முழுமையாகக் கடைப்பிடிக்கும் ஊர்களைப் பற்றிய பதிவாக ஒரு தொடர்.

# பகுத்தறிவுச் சிந்தனைகளால் வார்க்கப்பட்ட கழகக் கோட்டை!




ஓவியம் : சிகரன்

ஒருங்கிணைந்த மதுரை மாவட்ட தி.மு.க. செயலாளராக மதுரை முத்து இருந்தபோது, கும்மம்பட்டிக்கு அடிக்கடி வந்துசெல்வார். கும்மம்பட்டி கலை மன்றத்தோடு நெருக்கமான தொடர்பும் கொண்டிருந்தார். பின்னாளில் சட்டமன்ற உறுப்பினராக இருந்த சின்னாளப்பட்டி நாச்சிமுத்துவும் கும்மம்பட்டி கலை மன்றத்துடன் நெருங்கிப் பழகினார். இந்தத் தொடர்புகள் காரணமாக, 1953-இல் கலை மன்றத்தை திராவிட முன்னேற்றக் கழகத்தின் கிளைக் கழகமாக இணைத்தார் கு.சி.பழனிச்சாமி. கும்மம்பட்டி சுற்று வட்டாரத்தில், திராவிட முன்னேற்றக் கழகத்தின் முதல் கிளை இங்குதான் உருவானது.

திண்டுக்கல், வத்தலக்குண்டு, சோழவந்தான் என முக்கிய பகுதிகளில் மட்டுமே அப்போது தி.மு.கழகம் அடர்த்தியாக இருந்தது. அந்தக் காலகட்டத்திலேயே கும்மம்பட்டி என்ற சிற்றூரில் உருவான கிளைக்கழகம், கலை மன்றத்தின் வீரியமிக்க செயல்பாடுகளால் சுற்றுப்புற கிராமங்கள் எங்கும் பரவத் தொடங்கியது. தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணாவின் கொள்கைகளில் இருந்து இம்மியளவும் பின்வாங்காமல், பகுத்தறிவுக் கிராமமாகவும் கும்மம்பட்டியை வளர்த்தது, கலை மன்றம்.

புரோகிதத் திருமணங்கள் மட்டுமே நடைபெற்றுவந்த கும்மம்பட்டியில், முதன்முறையாக கு.சி.பழனிச்சாமி - இராசம்மாள் இணையருக்கு, பார்ப்பனியச் சடங்குகளை மறுத்து, சுய மரியாதைத் திருமணம் நடைபெற்றது. அதன்பிறகு, கும்மம்பட்டியில் திருமணம் நடைபெறும் வீடுகளுக்குக் கலை மன்றத்தினர் சென்று, முன்னேற்பாட்டுப் பணிகளைச் செய்துகொடுத்து, அவற்றை தமிழ் முறை திருமணங்களாக மாற்றினர். 1969-இல் சுயமரியாதைத் திருமணத்திற்கு அண்ணா சட்டபூர்வ அங்கீகாரம் தருவதற்கு முன்பே கும்மம்பட்டியில் நூற்றுக்கணக்கான சுயமரியாதைத் திருமணங்கள் கலை மன்றத்தால் நடந்துவிட்டன.

திள்ளான், திள்ளையம்மாள், அரியம்மாள், குழந்தை, குட்டியப்பன் எனக் குல தெய்வங்களின் பெயர்களே திரும்பத் திரும்ப வைக்கப்படுவது நடைமுறையில் இருந்தது. கலை மன்றம் தொடங்கப்பட்ட பின், தமிழில் பல்வேறு புதிய பெயர்களைச் சூட்டத் தொடங்கினர். சிற்றரசு, வணங்காமுடி எனத் தன் வீட்டில் இருந்தே புதிய தமிழ்ப் பெயர்கள் வைக்கும் வழக்கத்தை உருவாக்கினார் சிற்றரசு. தி.மு.க.வாக மாறிய பின்னர், கும்மம்பட்டியில் தமிழ்ப்பெயர் சூட்டல் ஒரு பெரும் இயக்கமாகவே மாறிவிட்டது. சிற்றரசு, வணங்காமுடி, புகழேந்தி, கலையரசி எனக் கு.சி.பழனிச்சாமி தன் குடும்பத்தில் சூட்டிய தமிழ்ப் பெயர்கள் ஊரெங்கும் பரவின. அனைவரும் தமிழ்ப் பெயர்களையே சூட்டத்தொடங்கினர்.

...பயணிப்போம்.

ஒருமுறை மதுரை முத்துவிடம் நான், ஆத்தூர் அருகில் இருக்கும் கும்மம்பட்டியில் இருந்து வருகிறேன் என்றேன். 'அப்படிச் சொல்லாதீர்கள், கும்மம்பட்டிக்கு அருகே உள்ள ஆத்தூர் என்று சொல்லுங்கள். அந்த அளவுக்கு நம் கழகத்துக்கு கும்மம் பட்டி முக்கியமான ஊர்' என்றார். அப்படி, கும்மம்பட்டி பகுத்தறிவுச் சிந்தனைகளால் வளர்க்கப்பட்ட தி.மு.க.வின் கோட்டை. இந்தக் கோட்டை உருவாவதற்கான வாடி வாசலாகக் கலை மன்றம் இருந்தது. இங்கிருந்து மில் வேலைக்காக பழநிக்குச் சென்ற பாண்டியன் என்பவர், அங்கு பஞ்சாலைத் தொழிலாளர்களுக்கு தி.மு.க.வின் கொள்கைகளைக் கடத்தினார். நில அளவையர், ஆசிரியர் என இங்கிருந்து வெளியே சென்ற அனைவரும் அங்கெல்லாம் தி.மு.க. கொள்கைகளைப் பேசி, சமத்துவம் - சமூக நீதிச் சிந்தனைகளை விதைத்தோம்.

- புலவர் துரை.தில்லான், கும்மம்பட்டி.



புலவர் துரை.தில்லான்

## கல்வியே, நம் பெருமை!

'தமிழ்நாட்டின் பெருமை என்பதும், அதன் பண்பட்ட எதிர்வினையாற்றும் போக்கும் ஒன்று' என முகநூலில் பதிவிட்டுள்ளார் பத்திரிகையாளர் தெ.சு.கவுதமன்.

"இந்தியாவில் ஒவ்வொரு மாநிலத்திற்கும் தனித்தன்மை உண்டு. ஆனால், அந்தத் தனித்தன்மையை நீர்த்துப்போகச் செய்யத்தான் டெல்லி தொடர்ச்சியாக முயன்றுவருகிறது. இதற்காக அவர்கள் கையிலெடுத்த மிகமோசமான மத அரசியல் மூளைச்சலவை, பெரும்பாலான வட மாநிலங்களைச் சீரழித்துவிட்டது.

உ.பி.யில் காவியுடுத்திய ஓர் இந்து சாமியார் தாடி வைத்திருப்பதால், அவர் மீது சந்தேகப்பட்டு, அவரது காவி உடையைப் பொதுவெளியில் அவிழ்த்துப்பார்த்தனர். மாட்டிறைச்சி வைத்திருப்பதாகச் சந்தேகப்பட்டு, கொல்லும் அளவுக்குச் செல்கிறார்கள். புல்டோசர் அரசியல் நடத்துகிறார்கள். இவையனைத்தையும் பொதுஜனம் கண்டுகொள்ளாதிருக்கிறது.

இதே இந்தியாவில், தமிழ்நாட்டில், ஏதேனும் அசம்பாவித சம்பவங்கள் நடந்தால், உடனடியாக அதற்கு எதிர்ப்பு கிளம்புகிறது. ஆளுங்கட்சிக்கு நெருக்கடி எழுகிறது... உடனடியாக விசாரித்து நடவடிக்கை எடுக்கப்படுகிறது... விளக்கம் தரப்படுகிறது... இதோ, சாதிரீதியாக ஒரு விவகாரத்தில் இரு நாட்களாகக் கடுமையான விவாதங்கள்... தன்னிலை விளக்கம் தருமளவுக்கு விவகாரம் பெரிதாகிறது.

வட மாநிலங்களில் பெயருக்குப் பின்னால் சாதி ஒட்டு சகஜம்... இங்கோ சாதிப்பெயரை நம் பெயரோடு இணைப்பதைப் பெருமையாகக் கருதுவதில்லை... 'நாம் படித்த கல்விதான் நம் பெருமை' என்ற மனப்பான்மை இருக்கிறது! சாதியைப் பெருமையாகப் பேசுவோரை நாம் சற்றுத் தள்ளிவைத்தே பார்க்கிறோம்... இப்படியான தனித்துவத்தில் நாம் ஒட்டுமொத்த இந்தியாவுக்குமே முன்னுதாரணமாக இருப்பது நம் பெருமை! இப்பெருமையைத் தொடர்ந்து தக்க வைத்துக்கொள்வது நம் விழிப்பு உணர்வில்தான் இருக்கிறது!" என்கிறது அந்தப் பதிவு.

## ஃப்ளாஷ்பேக்



### முதல் முறை தலைவரை அருகில் கண்டேன்!



வடுகை வீரா

2019-ஆம் ஆண்டு, சென்னை அண்ணா அறிவாலயம், கலைஞர் அரங்கில் நடைபெற்ற தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர்கள் கூட்டத்தில் நம் கழகத் தலைவர் திராவிட மாடல் நாயகர் தளபதியார் அவர்களை முதல் முறையாக அருகில் சென்று கண்டேன். பேரியக்கத்தின், பெரும் படையணியில் தலைவரைக் கண்டதும் உருவான உற்சாகம், ஊக்கம் கழகப் பணிக்கு அர்ப்பணித்துக் கொள்ளும் பேராற்றலை அளித்தது என்றால் மிகையில்லை.

- வடுகை வீரா, ஒன்றிய ஒருங்கிணைப்பாளர்,
தகவல் தொழில்நுட்ப அணி,
பெரியகுளம் வடக்கு ஒன்றியம், தேனி வடக்கு.

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## பொய்ப்பெட்டி

கோவி.லெனின்

97

"கழகம் சந்திக்கும் அவதூறுகள் குறித்த வினாவும் - விடையும்..."

# தவறுகள் களையப்படும், தீர்வுகள் எட்டப்படும்!




**தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் குரூப்-2, குரூப்-2-ஏ தேர்வுகள் ரத்து செய்யப்பட்டதற்கு, எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமியும் பா.ஜ.க. தரப்பிலும், அதன் பி, சி டீம்கள் தரப்பிலிருந்தும் கண்டனம் தெரிவித்திருக்கிறார்களே?**

தேர்வு நாளன்று, சென்னையில் தேர்வர்களின் மையங்கள் ஒதுக்கீட்டில் ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறு காரணமாக, மேலும் குழப்பங்களோ-முறைகேடுகளோ ஏற்படக் கூடாது என்பதற்காகத்தான் குரூப்-2, 2-ஏ தேர்வுகள் ரத்து செய்யப்பட்டன. இது முழுக்க முழுக்க தேர்வு எழுதியவர்களின் நலன் கருதி எடுக்கப்பட்ட நடவடிக்கையாகும். தேர்வு மையம் ஒதுக்கீடு செய்வதில் குழப்பம் ஏற்பட்டதற்கும், அதனால் தேர்வு எழுத வந்தவர்கள் பதற்றத்துடன் போராட்டத்தில் இறங்கியதற்கும் காரணமாக இருந்த அலுவலர்கள் மீதும், துறைரீதியான நடவடிக்கையைத் தமிழ்நாடு அரசு மேற்கொண்டுள்ளது. அது மட்டுமல்ல, ரத்து செய்யப்பட்ட தேர்வு, மார்ச் 15-ஆம் தேதி நடைபெறும் என மறுதேதியும் அறிவிக்கப்பட்டு விட்டது. அதற்கான ஹால் டிக்கெட்டுகள் பிப்ரவரி 28-ஆம் தேதியே கிடைக்கும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஒரு குறைபாடோ குழப்பமோ நடந்தால், அதுகுறித்து அரசியல் கட்சித் தலைவர்கள் கண்டனம் தெரிவிப்பது ஜனநாயக உரிமை. தி.மு.க. கூட்டணியில் உள்ள மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் எம்.பி. சு.வெங்கடேசன் தன்னுடைய சமூக வலைதளப் பதிவில் குருப்-2, 2-ஏ தேர்வுகள் குளறுபடிகள் குறித்து பதிவிட்டு, மாணவர்களின் நலன் பாதிக்கப்படாத வகையில், மறுதேர்வு நடத்த வேண்டும் என்றும் அரசுக்கு சுட்டிக்காட்டியிருக்கிறார். ஆனால், எடப்பாடி பழனிசாமி, 'குய்யோ முறையோ' எனக் குமுறியிருப்பது பச்சை அரசியல்தனமின்றி வேறில்லை. அ.தி.மு.க. ஆட்சியைப்போல, தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் தேர்வாணையத்தை (டி.என்.பி.எஸ்.சி) சிதைத்துச் சீரழித்த ஆட்சி வேறெதுவுமில்லை.

தேர்வாணையத்திற்கான உறுப்பினர்களை நியமிப்பதில் தொடங்கி, தேர்வுகள் நடத்தப்பட்டு, முடிவுகள் வெளியாவது வரை அ.தி.மு.க. ஆட்சி நடந்தபோதெல்லாம் முறைகேடுகளும் ஊழல்களுமே மலிந்திருந்தன. 2019 - ஆம் ஆண்டு, அ.தி.மு.க. ஆட்சியில், குரூப்-4 பணியிடங்களுக்கு நடைபெற்ற தேர்வுகளில், 3 மணி நேரத்தில் அழியக்கூடிய மையால் தேர்வு எழுதிய விவரமும், பின்னர் மதுரை மாவட்டம், மேலூர் அருகேயுள்ள நாவனிபட்டி என்ற இடத்தில், வாகனத்தை நிறுத்தி, தேர்வு எழுதப்பட்ட விடைத்தாள்களை எடுத்து, அழிந்துபோன இடங்களில் சரியான விடையை எழுதியும், அதன் அடிப்படையில் விடைத்தாள்கள் திருத்தப்பட்டு, மதிப்பெண்கள் வழங்கும் மோசடியையும் செய்தது வெட்ட வெளிச்சமாக அம்பலப்பட்டு, அரசு ஊழியர்கள் உள்பட 118 பேர் கைது செய்யப்பட்டனர். இந்தத் தேர்வாணைய ஊழல் விவகாரம் தொடர்பாக, சி.பி.ஐ. விசாரணைக்கு உத்தரவிட்டது, சென்னை உயர் நீதிமன்றத்தின் மதுரைக் கிளை. பா.ஜ.க. ஆட்சி செய்யும் மத்தியப் பிரதேச தேர்வாணையத்தின் வியாபம் ஊழல், ஒன்றிய பா.ஜ.க. அரசின் நீட் தேர்வு மோசடிகள் என மண்டிக்கிடக்கும் ஊழல்குப்பை நாற்றத்தில் நின்றுகொண்டு, தேர்வு எழுதியவர்களின் நலனுக்காக எடுக்கப்பட்ட நடவடிக்கையையும் மறுதேர்வு அறிவிப்பையும் விமர்சிக்க, பா.ஜ.க., அ.தி.மு.க. கூட்டணிக்கு அருகதையே இல்லை.

...வினா தொடரும்.

## நம் வரலாறு

### ஒரே நேரத்தில் இரண்டு மாநாடு!

1966-ஆம் ஆண்டு, செங்கல்பட்டு மாவட்ட தி.மு.க. 4-வது மாநாடும், நெல்லை மாவட்ட தி.மு.க. 4-வது மாநாடும் ஒரே நேரத்தில் இரண்டு நாட்கள் நடைபெற்றன. இப்படிப்பட்ட நடப்பு, வேறு எந்தக் கட்சி வரலாற்றிலும் நடைபெற்றதில்லை. அக்டோபர் 15 மற்றும் 16 தேதிகளில் நடைபெற்ற மாநாட்டில், முதல்நாளிலும் இரண்டாம் நாளிலும் பேரறிஞர் அண்ணா, நாவலர், கலைஞர் என முக்கிய தலைவர்கள் அனைவரும் கலந்துகொண்டு சொற்பொழிவாற்றினர்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131